**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**ஊத்துக்குளி**

**அசல் வழக்கு எண் 77/2021**

**PW: 1**

2023–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 22 ஆம் நாள், வாதி தரப்பு (வா.சா.1) சாட்சியின் வாக்கு மூலம் 1969ம் ஆண்டு விதி 44 ன் படி திரு.பா.தரணீதர், பி.ஏ., எல்.எல்.எம், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஊத்துக்குளி, அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| Name | பழனியம்மாள் | Caste | |
| Husband Name | பாட்டைய கவுண்டர் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 73 |

தேதி 22.09.2023

<u>**முதல் விசாரனை**</u>

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டம், செங்கப்பள்ளி அஞ்சல், செங்காடு என்ற முகவரியில் குடியிருக்கும் சுமார் 73 வயதுடைய பழனியம்மாள் என்னும் நான் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கைரேகை என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் இவ்வழக்கில் வாதியாவேன்.

**ஆவணங்கள்**

1. 16.09.1970ம் தேதிய கிரைய ஆவண எண். 568/1970ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 13.03.2007ம் தேதிய தானசெட்டில்மெண்ட் எண் 1069/2007 இணையவழி சான்றிட்ட நகல் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 15.09.2005ம் தேதிய கிரைய ஆவண எண். 1827/2005ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. 07.03.2007ம் தேதிய பிழைதிருத்தல் பத்திர எண் 1082/2007ன் இணையவழி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. கடந்த 05.05.2005 ம் தேதிய மாண்புமிகு ஈரோடு சார்பு நீதிமன்றம் (விடுமுறை நீதிமன்றம்) அசல் வழக்கு எண் 50/2005 ல் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவின் உண்மை நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பெருந்துறையில் அசல் வழக்கு எண் 241/2009 ல் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவின் உண்மை நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
7. 13.03.2007 ம் தேதிய ஊத்துக்குளி சார் பதிவாளரிடம் கொடுக்கப்பட்ட தடங்கல் மனு வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
8. தாவா சொத்தின் வழிக்காட்டி மதிப்பு இணையவழி நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2023.09.26 10:02:44 +0530

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.